**கோமங்கலம்புதூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை :** திருமதி D. மாசிலாமணி

**க.எண்: 05/2023-2024** **நாள்:** 18.01.2024

**பொருள்:** மனைப்பிரிவு - பொள்ளாச்சி தெற்கு வட்டாரம் - கோமங்கலம்புதூர் ஊராட்சி - க.ச.எண் 91/B2B நெ.காலையில் 1.75 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்தல் - நகர் ஊரமைப்புத் துறையில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - ஊராட்சி மன்ற அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 31.01.2020

2.வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் எண் இ1/13989/2023 நாள்: 24.11.2022

3.கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் ROC No CBEREGN/ Q1TT4TTL / 2023/2023/TCP நாள்: 28.08.2023

4.திருமதி G. உஷா பிரியதர்சினி, மனைப்பிரிவு உரிமையாளர் என்பவரின் விண்ணப்பம் எண் Q1TT4TTL நாள் 24.01.2023

5. கோமங்கலம்புதூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்: 90/2023 நாள்: 27.12.2023

**உத்தரவு:**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு வட்டாரம், கோமங்கலம்புதூர் ஊராட்சி கோமங்கலம்புதூர் கிராமத்தில் க.ச.எண் 91/B2B நெ.காலையில் 1.75 ஏக்கர் பரப்பில் புன்செய் நிலத்தினை விவசாயமற்ற அபிவிருத்தியாக் குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்ற பார்வை 1ல் கண்ட அரசாணையின்படியும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 47A(2)ன் படி பார்வை 3 ல் கண்ட கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் செயல் முறைகளின் படியும் மனைப்பிரிவு அமைக்க தொழில் நுட்ப முன் இசைவு வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பார்வை 3 ல் காணும் இணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, கோவை மண்டலம் அவர்களின் நடவடிக்கைகளில் தெரிவித்துள்ளவாறு அனைத்து

நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை விடுதலின்றி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கோமங்கலம்புதூர் ஊராட்சி கோமங்கலம்புதூர் கிராமத்தில் க.ச.எண் 91/B2B நெ.காலையில் 1.75 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தே மனைப்பிரிவிற்கு பார்வை 5ல் காணும் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் 90/2023 நாள்: 27.12.2023 ன்படி ஊராட்சி மன்றத்தில் திருமதி G. உஷா பிரியதர்சினி, என்பவர் கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதியுடன் சமர்ப்பித்த வரைபடங்கள் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1.கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2. வரைபட அனுமதி எந்த காரணத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதோ அது தவிர வேறு காரணங்களுக்கு உபயோகிக்ககூடாது. தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

3. மனைப்பிரிவு உரிமம் அனுமதிக்க பெறப்பட்ட கட்டணம் தவிரவேறு ஏதாவது கட்டணங்கள் அரசு வழிகாட்டு நெறிமுறைப்படி செலுத்தப்பட வேண்டும்.ஊராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் குறைவாக செலுத்தப்பட்டது என தெரியவந்தால் மறு அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் தொகையினை உரிய கணக்கில் செலுத்தப்பட வேண்டியது மனைப்பிரிவு உரிமையாளரின் பொறுப்பாகும்.

4. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன்மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில்அனுமதி பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்துடன் தீர்மான எண் மற்றும் நாள் குறித்த விபரம் மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6*4 அளவிலான தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. EWS மனைகள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கினைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.

6. மனைப்பிரிவு வரைபட அங்கீகாரம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் நகர் ஊரமைப்புத் துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

7.மேற்காண் நிபந்தனைகள் தவிர அரசு மற்றும் ஊராட்சி மன்றத்தால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

8. புதிய மனைப்பிரிவு அமைக்கப்பட்ட இடத்தில் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் குடிநீர் வசதிக்கான கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

9. மேற்காண் நிபந்தனைகள் மீறப்படுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ன்படி மனைப்பிரிவு உரிமையாளர் மீது நீதி மன்ற நடவடிக்கை எடுப்பதுடன் அபராதமும் விதிக்கப்படும். மேலும் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதியும் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்புகளுக்கு மனைப்பிரிவு உரிமையாளரே பொறுப்பாவார்.

D.மகாலிங்கமணி

**தலைவர்**

**கோமங்கலம்புதூர் ஊராட்சி**

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம்

பெறுநர்:-

திருமதி G. உஷா பிரியதர்சினி,

**நகல்:** இணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, கோயம்புத்தூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:** உதவி இயக்குநர் ( ஊராட்சிகள்) கோயம்புத்தூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:** சார் பதிவாளர், கோமங்கலம்.

**நகல்:** ஊராட்சி இருப்பு கோப்பிற்கு

**<u>தீர்மான நகல்</u>**

**<u>கோமங்கலம்புதூர் ஊராட்சி</u>**

2023 ம் வருடம் நவம்பர் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கோமங்கலம்புதூர் ஊராட்சியின் சாதாரணக் கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

**முன்னிலை:** திருமதி D. மாசிலாமணி
தலைவர்
கோமங்கலம்புதூர் ஊராட்சி

| வ.எண் | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 3 | பொள்ளாச்சி தெற்கு வட்டாரம், கோமங்கலம்புதூர் ஊராட்சி க.ச.எண் 91/B2B நெ.காலையில் 1.75 ஏக்கர் பரப்பளவில் உள்ள பூமி ஆவணங்களின் அடிப்படையில் திருமதி G. உஷா பிரியதர்சினி, என்பவருக்கு சொந்தமானது. மேற்படியாரின் விண்ணப்பத்தின்படி கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் ROC No CBEREGN/ Q1TT4TTL / 2023/2023/TCP நாள்: 28.08.2023ன் தொழில் நுட்ப அனுமதியின் படியும் மனைப்பிரிவு அங்கீகார எண் 276 / 2023ன்படியும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு ஒப்படைவ செய்யப்பட வேண்டிய பொது உபயோக இடம் 36.29.19 ச.மீட்டரும் 1980.10 ச.மீ சாலை இடமும் கோமங்கலம்புதூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண் 2272/2023ன்படி ஊராடசிக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய பரிசீலணைக் கட்டணம் ரூ1000/- மற்றும் ஒவ்வொரு மனைக்கும் ஆய்வுக் கட்டணமாக தலா ரூ 1000/-மும் செலுத்தப்பட்டுள்ளது.. மேலும் மனைப்பிரிவின் மொத்த இடத்தில் விற்பனை மதிப்பில்(market value) அரசு தலைப்பில் 3% செலுத்தி சலான் ஊராட்சிக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் ROC No CBEREGN/ Q1TT4TTL / 2023/2023/TCP நாள்: 28.08.2023ன் மனைப்பிரிவு அங்கீகார எண் 276 / 2023 ல் மேற்படி மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுடன் கூடிய தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்புத் துறை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை உரியவாறு செயல்படுத்தவும் கடைப்பிடிக்கவும் தெரிவித்து நிபந்தனையுடன் கோமங்கலம்புதூர் ஊராட்சி கோமங்கலம்புதூர் கிராமத்தல் உள்ள க.ச.எண் 91/B1B நெ.காலையில் 1.75 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஊராட்சி நிர்வாகம் இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டல். | 90/2003<br>அங்கீகரிக்கப்பட்டது |

**/உண்மை நகல்/**

D.மாசிலாமணி
தலைவர்
கோமங்கலம்புதூர் ஊராட்சி
பொள்ளாச்சி (தெற்கு)